भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

**பகுதி XV பிரிவு 1**

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

---

नई दिल्ली, गुरुवार, 14 अकतूबर 1999/1921 सका

New Delhi, Thursday, 14th October 1999/1921 Saka

**புது தில்லி, வியாழக்கிழமை 14, அக்டோபர் 1999/1921 சக**


---

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department) New Delhi

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புது தில்லி**

The Translation in Tamil of the Departmental Inquiries (Enforcement of Attendance of Witnesses and Production of Documents) Act, 1972 (18 of 1972), The Anti-Apartheid (United Nations Convention) Act, 1981 (48 of 1981), The Railway Property (Unlawful Prossession), Act, 1966 (29 of 1966), The Presidents Emoluments and Pension Act, 1951 (30 of 1951), The Water (Prevention and Control of Pollution) Cess Act, 1977 (36 of 1977), The Dramatic Performances Act, 1876 (19 of 1876), The Delivery of Books and Newspapers (Public Libraries) Act, 1954 (27 of 1954), The Forfeited Deposits Act, 1850 (25 of 1850), The Family Courts Act, 1984 (66 of 1984), The Seamen's Provident Fund Act, 1966 (4 of 1966), The Agricultural and Processed Food Products Export Development Authority Act, 1985 (2 of 1986), The Administrative Tribunals Act, 1985 (13 of 1985) are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*துறை விசாரணைகள் (சாட்சிகளை முன்னிலையாகும்படியும் ஆவணங்களை முன்னிலைப்படுத்தும்படியும் கட்டாயப்படுத்துதல்) சட்டம், 1972 (18/1972), இன ஒதுக்கல் ஒழிப்பு (ஐக்கிய நாடுகள் இணங்காறு) சட்டம், 1981 (18/1981), இருப்பூர்தியச் சொத்து (சட்ட முரணான உடைமை) சட்டம், 1966 (29/1966), குடியரசுத் தலைவரின் பதவியூதியங்கள் மற்றும் ஓய்வூதியச் சட்டம், 1951 (30/1951), நீர் (மாசுத்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல்வரிச்சட்டம், 1977 (36/1977), நாடகக்கலை நிகழ்ச்சிகள் சட்டம், 1876 (19/1876), நூல்களையும் செய்தித்தாள்களையும் வழங்குதல் (பொது நூலகங்கள்) சட்டம், 1954 (27/1954), பறிமுதல் செய்யப்பட்ட வைப்பீடுகள் சட்டம், 1850 (25/1850), குடும்ப நீதி மன்றங்கள் சட்டம், 1984 (66/1984), கடலோடிகள் வருங்கால வைப்பு நிதியச்சட்டம், 1966 (4/1966), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகார அமைப்புச் சட்டம், 1985 (2/1986) நிருவாகப்பணித் தீர்ப்பாயங்கள் சட்டம், 1985, (13/1985), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச்சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 71.00]

# இருப்பூர்தியச் சொத்து (சட்டமுரணான உடைமை) சட்டம், 1966

## (சட்ட எண் 29/1966)

[1966, செப்டம்பர் 16]

இருப்பூர்தியச் சொத்தினைச் சட்டமுரணான உடைமையில் வைத்திருப்பது தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைப்பதற்கும் திருத்துவதற்குமான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் பதினேழாவது ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1.(1) இந்தச் சட்டம், இருப்பூர்தியச் சொத்து (சட்டமுரணான உடைமை) சட்டம், 1966 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. தறுவாயின் தேவை வேறானாலன்றி, இந்தச் சட்டத்தில்,—

(அ) "படை" என்பது, இருப்பூர்தியப் பாதுகாப்புப் படைச்சட்டம், 1957 இன் பிரிவு 3இன்படி அமைக்கப்பட்ட இருப்பூர்தியப் பாதுகாப்புப்படை என்று பொருள்படும்;

(ஆ) "படையின் உறுப்பினர்" என்பது, அந்தப்படைக்கு அமர்த்தப்பட்ட மேல்நிலை அலுவலரல்லாத பிற ஒருவர் என்று பொருள்படும்;

(இ) "படையின் அலுவலர்" என்பது, அந்தப் படைக்கு அமர்த்தப்பட்ட உதவித் துணைஆய்வாளர் படிநிலையிலும் அதற்கு மேற்படியிலும் உள்ள அலுவலர் ஒருவர் என்று பொருள்படும்;

(ஈ) "இருப்பூர்தியச் சொத்து" என்பது, ஓர் இருப்பூர்திய நிருவாகத்திற்குச் சொந்தமான அல்லது அதன் பொறுப்பிலுள்ள அல்லது அதன் உடைமையில் உள்ள சரக்குகள், பணம் அல்லது மதிப்புள்ள காப்புறுதி அல்லது விலங்கு எதையும் உள்ளடக்கும்;

(உ) "மேல்நிலை அலுவலர்" என்பது, இருப்பூர்தியப் பாதுகாப்பு படைச் சட்டம், 1957 இன் பிரிவு 4 இன்படி அமர்த்தப்பட்ட அலுவலர்களில் எவரும் என்று பொருள்படும்; மற்றும் அந்தப்படையின் மேல்நிலை அலுவலராக மைய அரசாங்கத்தால் அமர்த்தப்படுகிற பிற அலுவலர் எவரையும் உள்ளடக்கும்;

(ஊ) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, பொருள்வரையறை செய்யப்படாதவையும், இந்திய இருப்பூர்தியச் சட்டம், 1890 இல் பொருள்வரையறை செய்யப்பட்டவையுமான சொற்களும் சொற்றொடர்களும், முறையே இந்தச் சட்டத்தின்படி அவற்றுக்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளினை உடையன ஆகும்.

இருப்பூர்தியச் சொத்தினை சட்டமுரணாக உடைமையில் வைத்திருப்பதற்கான தண்டனை.

3. திருடப்பட்டிருப்பதாக அல்லது சட்டமுரணாகப் பெறப்பட்டிருப்பதாக தகவாக ஐயப்படுகிற இருப்பூர்தியச் சொத்து எதையும் உடைமையில் வைத்திருப்பதாகக் காணப்படுகிற அல்லது மெய்ப்பிக்கப்படுகிற எவரொருவரும், அந்த இருப்பூர்தியச் சொத்து அவருடைய உடைமையில் சட்டப்படியாக வந்தது என அவர் மெய்ப்பித்தாலன்றி,—

(அ) முதல் குற்றச்செயலுக்காக, ஐந்தாண்டுவரை நீடிக்கலாகும் காலஅளவுக்குச் சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; ஆனால் நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் சொல்லப்பட வேண்டிய சிறப்பான மற்றும் போதுமான காரணங்கள் இல்லாதிருக்கையில், அத்தகைய சிறைத்தண்டனை ஓர் ஆண்டுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய அபராதம் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்;

(ஆ) இரண்டாவது அல்லது பிந்தைய குற்றச்செயல் ஒன்றுக்காக ஐந்தாண்டுவரை நீடிக்கலாகும். ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையும் அதோடுகூட அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; ஆனால், நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் சொல்லப்படவேண்டிய சிறப்பான மற்றும் போதுமான காரணங்கள் இல்லாதிருக்கையில், அத்தகைய சிறைத்தண்டனை இரண்டாண்டுகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய அபராதம் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

குற்றச் செயல்களுக்கு மறைமுக ஆதரவு அளிப்பதற்கான தண்டனை.

4. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு எதிரான குற்றச்செயல் ஒன்றிற்கு வேண்டுமென்றே மறைமுக ஆதரவு தருகிற, நிலம் அல்லது கட்டடத்தின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் எவரும், அல்லது அந்த நிலத்தின் அல்லது கட்டடத்தின் மேலாண்மையை தம் பொறுப்பில் கொண்டிருக்கின்ற அத்தகைய உரிமையாளர் அல்லது கையுடைமையாளரின் முகவர் எவரும் ஐந்தாண்டுவரை நீடிக்கலாம். ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

இந்தச் சட்டத்தின் படியான குற்றச்செயல்கள் கைது செய்வதற்குரிய குற்றச் செயல்கள் அல்ல என்பது.

5. குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1898 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் கைது செய்வதற்குரியதல்லாதது ஆகும். (5/1898)

பிடியாணை யின்றிக் கைது செய்வதற்கு அதிகாரம்.

6. படையின் மேல்நிலை அலுவலர் அல்லது உறுப்பினர் எவரும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றில் தொடர்புடைய எவரையும் அல்லது அவ்வாறு தொடர்பு கொண்டிருப்பதாக எவர் மீது தகுமான ஐயமிருக்கிறதோ அவரையும் குற்றவியல் நடுவர் ஒருவரின் ஆணை ஒன்று இல்லாமலும், பிடியாணை இல்லாமலும் கைது செய்யலாம்.

கைது செய்யப் பட்டவர்களை என்ன செய்யவேண்டும் என்பது.

7. இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றிற்காகக் கைது செய்யப்பட்ட ஒவ்வொருவரும், அந்தப்படையின் அலுவலரல்லாத பிற ஒருவரால் கைது செய்யப்பட்டிருப்பின், மிக அருகிலுள்ள படை அலுவலரிடம் காலத்தாழ்வின்றி அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

கைது செய்யப் பட்டவர்களுக்கு எதிராக விசாரணை எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது.

8(1) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றிற்காக எவரும், படையின் ஓர் அலுவலரால் கைதுசெய்யப்படும்போது அல்லது பிரிவு 7 இன்படி அவரிடம் அனுப்பி வைக்கப்படும் போது, அவர் அத்தகையவருக்கு எதிராகவுள்ள குற்றச்சாட்டினை விசாரணை செய்ய முற்படுதல் வேண்டும்.

(2) இந்த நோக்கத்திற்காக அந்தப் படையின் அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்தற்குரிய வழக்கு ஒன்றைப் புலனாய்வு செய்யும்போது, ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பையுடைய அலுவலர் ஒருவர், குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டம், 1898 இன்படி செலுத்தலாகும் அதே அதிகாரங்களைச் செலுத்தலாம். ஆனால், அவர் உட்பட்டிருக்கும் அந்தச் சட்டத்தின் அதே வகைமுறைகளுக்கு அந்தப் படையின் அலுவலர் உட்பட்டிருத்தல் வேண்டும்: (5/1898)

வரம்புரையாக:

(அ) குற்றஞ்சுமத்தப்பட்டவருக்கு எதிராகப் போதுமான சான்று அல்லது அவரை ஐயுறுவதற்குத் தகுமான காரணம் இருக்கிறது என அந்தப் படையின் அலுவலர் கருதுவாராயின், அந்த வழக்கில், அதிகாரவரம்பு கொண்டிருக்கிற குற்றவியல் நடுவர் முன்பு முன்னிலையாகியதற்காக அவரைப் பிணையத்துடன் விடுதல் வேண்டும் அல்லது, அவரைக் காவலில் வைத்து அத்தகைய குற்றவியல் நடுவரிடம் அனுப்பிவைத்தல் வேண்டும்;

(ஆ) குற்றஞ்சுமத்தப்பட்டவருக்கு எதிராகப் போதுமான சான்று அல்லது அவரை ஐயுறுவதற்குத் தகுமான காரணம் இல்லையென அந்தப் படையின் அலுவலருக்குத் தோன்றுமாயின், அவர் அதிகாரவரம்பு கொண்டிருக்கிற நேர்வில், குற்றவியல் நடுவர் முன்பு முன்னிலையாவதற்கு வேண்டுறுத்தப்படுமாயின், அல்லது வேண்டுறுத்தப்படும்போதும் முன்னிலையாவதற்காகப் படையின் அலுவலர் பணிக்கலாகிறவாறு பிணைதாரர்களுடனோ பிணைதாரர்களில்லாமலோ குற்றஞ்சுமத்தப்பட்டவர் பிணைமுறி ஒன்றை எழுதிக் கொடுப்பதன்பேரில், அவரை விடுவித்தல் வேண்டும், மற்றும் அவர் அந்த வழக்கின் விவரங்கள் அனைத்தையும் கொண்ட ஒரு முழுமையான அறிக்கையை அலுவல் முறையில் அவருக்கு மேல்நிலையிலுள்ளவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

சான்று அளிப்பதற்கும், ஆவணங்களை முன்னிலைப் படுத்துவதற்கும் நபர்களுக்கு அழைப்பாணை அனுப்புவதற்கும் அதிகாரம்.

9.(1) படையின் அலுவலர் ஒருவர், இந்தச் சட்டத்தின் நோக்கங்களில் எதற்காகவும் அந்த அலுவலர் செய்கிற விசாரணை எதிலும், சான்று அளிப்பதற்கு, அல்லது ஆவணம் ஒன்றை அல்லது பிற பொருள் எதனையும் முன்னிலைப்படுத்துவதற்கு, எந்த நபர் முன்னிலையாவது தேவையென அவர் கருதுகிறாரோ அந்த நபர் எவரையும், முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்புவதற்கு அதிகாரம் உடையவர் ஆவார்.

(2) ஆவணங்கள் அல்லது பிற பொருட்களை முன்னிலைப்படுத்துவதற்கான அழைப்பாணையானது, முன்னிலையாகுமாறு ஆணையிடப்பட்டவரின் உடைமையில் அல்லது கட்டாளுகையில் இருக்கிற குறித்துரைக்கப்பட்ட குறித்த சில ஆவணங்களை அல்லது பொருட்களை முன்னிலைப்படுத்துவதற்கானதாகவோ அல்லது ஒரு குறித்தசில விவரிப்பையுடைய ஆவணங்கள் அல்லது பொருட்கள் அனைத்தையும் முன்னிலைப்படுத்துவதற்கானதாகவோ இருக்கலாம்.

(3) அவ்வாறு அழைப்பாணை அனுப்பப்பட்டவர்கள் அனைவரும் அத்தகைய அலுவலர் பணிக்கலாகிறவாறு நேரிலோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவர் வாயிலாகவோ முன்னிலையாவதற்குக் கட்டுப்பட்டவராவார்; மற்றும் அவ்வாறு அழைப்பாணை அனுப்பப்பட்ட நபர்கள் அனைவரும், எந்தப் பொருள் பொறுத்து விசாரிக்கப்படுகிறார்களோ அந்தப் பொருள் பொறுத்து உண்மையைச் சொல்லவும் அல்லது விவரவுரைகள் கொடுக்கவும், வேண்டுறுத்தப்படலாகும் ஆவணங்கள் மற்றும் பிற பொருட்களை முன்னிலைப்படுத்தவும் கட்டுப்பட்டவராவர்:

(5/1908) வரம்புரையாக: உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908இன் பிரிவுகள் 132 மற்றும் 133 இன் படியான விலக்குகள் இந்தப் பிரிவின்படி முன்னிலையாவதற்கான வேண்டுறுத்தங்களுக்குப் பொருந்தும்.

(45/1860) (4) மேற்சொன்ன விசாரணை ஒவ்வொன்றும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச்சட்டத்தின் பிரிவு 193 மற்றும் பிரிவு 228 இன் பொருளின்படி ஒரு "நீதித் துறை நடவடிக்கை" என்று கொள்ளப்படுதல் வேண்டும்.

சோதனை யாணை பிறப்பித்தல்.

10. (1) படையின் அலுவலர் ஒருவர் திருடப்பட்ட அல்லது சட்ட முரணாகப் பெறப்பட்ட இருப்பூர்திய சொத்தினைப் போட்டுவைப்பதற்காக அல்லது விற்பனை செய்வதற்காக இடம் எதுவும் பயன்படுத்தப்படுகிறது என்று நம்புவதற்கு காரணம் கொண்டிருப்பாராயின், அவர் இந்த இடம் அமைந்திருக்கிற, வரையிடத்தில் அதிகாரவரம்பு கொண்டிருக்கிற குற்றவியல் நடுவரிடம் சோதனையாணை ஒன்று பிறப்பிப்பதற்காக விண்ணப்பம் ஒன்றை செய்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன் படி எந்தக் குற்றவியல் நடுவருக்கு விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் குற்றவியல் நடுவர் அவர் தேவையெனக் கருதுகிற விசாரணைக்குப்பின்பு,—

(அ) தேவைப்படலாகும் உதவியுடன் அத்தகைய இடத்திற்குள் நுழைவதற்கு,

(ஆ) அந்தப் பிடியாணையில் குறித்துரைக்கப்பட்ட முறையில் அதைச் சோதனை செய்வதற்கு,

(இ) திருடப்பட்டதாக அல்லது சட்டமுரணாகப் பெறப்பட்டதாக அவர் தகவாக ஐயப்படுகிறதும், அங்கு காணப்படுகிறதுமான இருப்பூர்தியச் சொத்து எதையும் உடைமையில் எடுத்துக்கொள்வதற்கு, மற்றும்

(ஈ) ஒரு குற்றவியல் நடுவருக்கு அத்தகைய இருப்பூர்தியச் சொத்தினை அனுப்பி வைப்பதற்கு அல்லது அந்தக் குற்றவாளி, குற்றவியல் நடுவர் ஒருவர் முன்பு கொண்டு செல்லப்படும் வரை, அதை அந்த இடத்திலேயே வைத்து பாதுகாப்பதற்கு, அல்லது ஏதாவது பாதுகாப்பான இடத்தில் பிறவாறாக அதற்கு வகைசெய்வதற்கு,

தம் பிடியாணையின் வாயிலாக, அந்தப் படையின் அலுவலர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

சோதனைகளும் கைதுகளும் எவ்வாறு செய்யபபட வேண்டும் என்பது.

11. இந்தச் சட்டத்தின்படி செய்யப்படுகிற சோதனைகள் மற்றும் கைதுகள் அனைத்தும், குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1898 இன் படி செய்யப்படுகிற சோதனைகளுக்கும் கைதுகளுக்கும் முறையே தொடர்புடையவையான அந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க நடத்தப்பெறுதல் வேண்டும். (5/1898)

உதவுவதற்கு வேண்டுறுத்தப் படுகிற அலுவலர்கள்.

12. இந்தச் சட்டத்தை செயற்படுத்துவதில் படையின் மேல்நிலை அலுவலர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் உதவுவதற்கு, அனைத்து அரசாங்க அலுவலர்களும், அனைத்து கிராம அலுவலர்களும் ஈங்கிதனால் அதிகாரம் அளிக்கப்பட்டு வேண்டுறுத்தப்படுகிறார்கள்.

ஊர்திகள் முதலியவற்றைத் தண்ட இழப்பாக்க ஆணை யிடுவதற்கு நீதிமன்றங்களின் அதிகாரம்.

13. இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றை விசாரிக்கின்ற நீதிமன்றம் எதுவும், எந்தச் சொத்து பொறுத்து இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது என நீதிமன்றம் தெளிவுறக் காண்கிறதோ, அந்தச் சொத்து எதுவும் அரசாங்கத்திற்குத் தண்ட இழப்பாகச் சேரவேண்டுமென்று ஆணையிடலாம் மற்றும் அந்தச் சொத்து அடங்கியிருக்கிற கொள்கலங்கள், சிப்பங்கள் அல்லது உறைகள் எவையும் மற்றும் அந்தச் சொத்தினைக் கொண்டு செல்வதில் பயன்படுத்தப்பட்ட விலங்குகள், ஊர்திகள் அல்லது பிற வாகனங்களும் அரசாங்கத்துக்கு தண்ட இழப்பாகச் சேர வேண்டுமென்று கூட ஆணையிடலாம்.

பிற சட்டங்களைவிட இந்தச் சட்டம் மேலோங்கி நிற்கும்.

14. அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எதுவும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இருந்தபோதிலும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் செல்திறம் உடையன ஆகும்.

ஜம்மு-காஷ்மீரில் செல்லாற்றலில் இல்லாத சட்டங்களுக்கான குறித்தனுப்புகை களின் பொருள்கோள்.

15. இந்தச் சட்டத்தின், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் செல்லாற்றலில் இல்லாத சட்டம் ஒன்றிற்கான குறித்தனுப்புகை எதுவும், அந்த மாநிலம் தொடர்பாக, அந்த மாநிலத்தில் செல்லாற்றலில் உள்ள அதற்கு நேரிணையான சட்டம், ஏதேனுமிருப்பின், அதற்கான குறித்தனுப்புகை ஒன்றாக பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(51/1955) 16(1) இருப்பூர்தியப் பண்டக சாலைகள் (சட்டமுரணான உடைமை) சட்டம், 1955 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவும் காப்புரைகளும்.

(2) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்ட சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல்களுக்குப் பொருந்துதல் ஆகாது மற்றும் அத்தகைய குற்றச்செயல்கள், இந்தச் சட்டம் இயற்றப்படாதிருந்தாற்போன்றே புலனாய்வும் விசாரணையும் செய்யப்படலாம்.

(10/1897) (3) உட்பிரிவு (2) இல் சொல்லப்பட்டுள்ள பொருட்பாடுகளைப் பற்றிய குறிப்பானது, நீக்கறவுகளின் செயற்பாடு குறித்து, பொதுவகையங்கள் சட்டம், 1897 இன் பிரிவு 6 இன் பொதுவான பொருந்துகைக்குக் குந்தகமானதாகவோ அதனைப் பாதிப்பதாகவோ இருத்தல் ஆகாது.